# ஊரோடு உறவாட....

பௌதிக ரீதியாக ஈழத் திருநாட்டின் சிகரமாக விளங்கும் யாழ் குடாநாட்டின் வடகோடியில் அமைந்துள்ள பரந்த நிலப் பிரதேசம் வடமராட்சி. வட மறவர் ஆண்ட பகுதி வடமராட்சி என்பது வரலாறு. மறவர் என்னும் பதத்திற்கு படைவீரர் என்னும் பொருளும் உண்டு. அதுவே இங்கு சாலப் பொருந்துவதாக அமைந்துள்ளமை சிந்திக்கற் பாலது.

இப் பிரதேசத்தின் திக்கெல்லைகள் இயற்கையானவை. வடக்கு பாக்கு நீரிணை, கிழக்கு வங்கக் கடல், மேற்கும் தெற்கும் தொண்டமானாறு என்னும் நீர்க்கோப்புகளாகும். இப் பிரதேசத்தில் உள்ளிட்ட கிராமங்களுள் புலோலி பழம்பெரும் பாரம்பரியத்தையும் நீண்ட புராதன மொழி, சமய கலாசார மரபு விழுமியங்களையும் தனித்துவமாகத் தன்னகத்தே கொண்ட புகழ் பூத்த தொன்மைக் கிராமம் ஆகும். புலவர்கள் ஒலித்தமையால் புலோலி என்னும் காரணப்பெயர் சூட்டப்பெற்றது என்பது கல்விமான்களின் முடிபு. பச்சிமப் புலவர்கான நகரமென இதற்கு மறுபெயருமுண்டு.

பருத்தித்துறை நகரசபையின் தெற்கு எல்லை இதன் வடக்கு எல்லையாகவும், பருத்தித்துறை மருதங்கேணி வீதி கிழக்கு எல்லையாகவும், துன்னாலை, அல்வாய் என்னும் கிராமங்கள் முறையே தெற்கு மேற்கு எல்லைகளாகவும் அமையும்.

அரச நிர்வாக நோக்கில் புலோலி திக்குவாரியாக 14 கிராம சேவகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண சரித்திரம் என்னும் நூலில் ‘சிகிரி வேளாளனும் குவளை மார்பனும் கல்வி, செல்வம், மெய்யுரை, ஊக்கம், தோற்றம், அழகு என்பனவற்றினால் சிறந்தவனுமாகிய கனக மழவனையும் அவன் தம்பியர் நால்வரையும் புலோலியென

வழங்கும் ஊரிலிருக்குமாறு பணித்தான் பாண்டியராசன்' என அந் நூலாசிரியர் ஆ. முத்துத்தம்பி குறிப்பிட்டுள்ளார்.

அவ்வகையில் புலோலியில் வாழ்ந்துவரும் பூர்வீகக் குடிமக்களின் வம்சாவளியினர் இத்துணை அரிய நற்குணாதிசயங்கள் ஒருங்கே அமையப்பெற்ற உத்தம கனகமழவன் பரம்பரையை சார்ந்தவரென்ற ஒப்பற்ற பெருமிதத்துடனும் சிறப்புடனும் திகழ்கின்றனர். இவ்வுன்னத மகிமை பொய்த்திடா வண்ணம் அவர்கள் சகல நற்றுறைகளிலும் குறிப்பாகக் கல்வித் துறையில் அதிக புலமை மிக்கோராகவும் சமயக் கோட்பாடுகள், ஒழுக்கம், நேர்மை, பாரம்பரியம் முதலியவற்றை அனுசரித்து சீருற வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் பல பண்டிதர்கள், வித்துவ சிரோமணிகள், நாவலர்கள் இப்புண்ணிய கிராமத்தில் பிறந்து பணியாற்றித் தத்தம் முத்திரையைப் பதித்து மறைந்தமைக்கான சான்றுகள் உள்ளன.

தமிழ் நாட்டுப் பேரறிஞர்களால் போற்றப்பட்டு மாயாவாததும் சகோளரி, அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், ஆரணி நகர சமஸ்தான வித்துவான், மகாவித்துவான், நாவலர், பெருஞ்சொற்கொண்டல், சைவசித்தாந்த மகாசரபம், சதாவதானி எனப் பல்வேறு பட்டங்கள், விருதுகள், பாராட்டுக்கள் பெற்றுப் புலோலியின் புகழைக் கடல் கடந்து தாய்நாட்டில் பரப்பி அதிசயஞ் செய்த மேலைப் புலோலி நா. கதிரை வேற்பிள்ளை, சாதாரண சம்பாஷணையில் ஈடுபடும் போதும் இலக்கண விதிகளை அனுசரித்துப் பேசிப் புகழ் சேர்த்த புலோலி குமாரசுவாமிப் புலவர், ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் சைவ சமயப் பிரசங்கங்கள், சொற்பொழிவுகள், உபநியாசங்கள் மூலம் புகழீட்டிய திலைநாத நாவலர், ஈழத்துக் கல்விமான்கள் குழுவில் அங்கம் வகித்து தமிழ் நாட்டில் நடந்தேறிய

தமிழாராய்ச்சி மாநாட்டில் கட்டுரை வாசித்து பாராட்டுப் பெற்ற தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை, உயர் சைவ சமய தத்துவங்கள் சித்தாந்தங்களைத் தமது புலமையால் ஆங்கில மொழியில் வெளிக்கொணர்ந்து கீர்த்தி சேர்த்த சைவப்பெரியார் சு. சிவபாத சுந்தரனார், புகழ் பூத்த பாடநூல் பதிப்பாளராக மிளிர்ந்த கவிஞர் மேலைப்புலோலி வே. சிவக்கொழுந்து அவர்கள், தமிழ் மரபுக்கமைவாக பனை ஓலையால் வேயப்பட்ட மண்குடிசையுள் குருசீட முறைமையில் பள்ளி சேர்த்துக் கல்வி புகட்டி பல பண்டிதர்களை உருவாக்கி, நாவலன் கோவை என்னும் நூலை தமிழுலகிற்கு அளித்த அறிஞர் கந்தமுருகேசனார் ஆகிய மூதறிஞர்கள் மறைந்தும் மறையாதவராய் கற்றறிந்தோர் உள்ளத்தில் என்றும் நிலைத்துள்ளனர்.

இச் சான்றோர்களின் அடியொற்றியவர்களாகத் தென் புலோலியூரில் தொன்மை இலக்கண, இலக்கிய நூல்களில் பாண்டித்தியம் பெற்றவர்களுள் பேச்சுத் தமிழை உயிர்த்துடிப்புடன் நாடகங்களில் கையாண்டு ஈழத்து உரைநடை இலக்கியத்தில் புதியதொரு இலக்கிய செல்நெறியைத் தோற்றுவித்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை மற்றும், கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை, பண்டிதர் வீ. பரந்தாமன் போன்றோர் குறிப்பிடத்தக்க அறிஞராக விளங்குகின்றனர். இத்தரத் தகைமை பெற்றோர் அருகிவரும் இக்கால கட்டத்தில் புனைகதை இலக்கியத்துறையின் விரிவாக்கப் பணியில் கணிசமான எண்ணிக்கையிலான கலைஞர்கள் இங்கு ஈடுபட்டு வருவது மகிழ்ச்சியூட்டுவதாக உள்ளது. இக்கலைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அமரர் கு. பெரியதம்பிப் புலவர் ஆவர். இலக்கண, இலக்கியங்களையும் நன்கு ஆய்ந்து கற்றவர். சமுதாய மாற்றம் பற்றிய உணர்வைத் தமது படைப்புகளில் முக்கியப்படுத்தி நின்று ஐம்பதுகளில் எழுத ஆரம்பித்த என். கே. ரகுநாதனின் பிறப்பிடமும் புலோலியூர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மற்றும்

புலோலியூர் க. தம்பையா, க. சதாசிவம், செ. கந்தசாமி, ஏ.ரி. நித்தியகீர்த்தி, சிங்கைத்திவாகரன், ஆ. இரத்தினவேலோன், க. குகநாயகி, மங்களராணி ஆகியோர் நிகழ்காலப் புனைகதைக் கலைஞர்களாவர். கட்டுரை ஆக்கப்பணியில் விஞ்ஞானம் சார்ந்த துறையில் சு. பேராசிரியன், சமூக சமயத் துறையில் முருக வே. பரமநாதன், வே. ஆறுமுகம், செல்வத்தம்பி மாணிக்கவாசகர், சூரியகுமாரி பஞ்சநாதன், பாலவைரவநாதன், மரபுவழிக் கவிதைத் துறையில் வே. ஆறுமுகம், ஆ. விநாயகமூர்த்தி, பு. வேலவகுமார், தொல்லியலில் ஆ. தேவராசன், நூல் வெளியீடு மற்றும் திறனாய்வுத் துறையில் ஆ. இரத்தினவேலோன் இன்னும் இலைமறைகாய்களாக வாழ்ந்த, வாழும் இலக்கியவாதிகளும், தென் புலோலியூரில் குறிப்பிடத்தக்கவராவர். இவர்கள் தங்கள் ஆக்கங்களில் பரிசு, பாராட்டு, விருது, சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவற்றையும், ஏனைய சிலவற்றையும் தொகுத்து அரங்கேற்றியுள்ளனர். தமிழ் கூறும் நல்லுலகு அறியும் வண்ணம் தமது ஆக்கங்களில் ஆங்காங்கு சில சம்பவங்களில் ஈழத் தமிழர் படும் அவலங்களை கற்பனை என்ற போர்வையில் புகுத்த அவர்கள் தவறவில்லை.

சைவ சமய வளர்ச்சியிலும் அதன் மேம்பாட்டையும் புனிதத்தையும் பேணிக்கட்டிக் காக்கும் கைங்கரியத்திலும் புலோலி வாழ் மக்கள் சளைத்தவரல்லர். கந்தபுராண, திருவிளையாடற் புராணப் படனங்களை நாவலர் பெருமான் காட்டிய சீரிய வழியில் நிகழ்த்தும் திருப்பணியில் சுப்பிரமணிய சாத்திரியார் குழு ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உடை, நடை, பாவனை, பழக்க வழக்கங்களில் அவர்கட்கென தனிப்பாரம்பரியம் உண்டு. குழந்தைகட்கு பெயரிடும்போது பரம்பரைப் பெயர்களையே கையாண்டு வருகின்றனர். அப்பெயர்கள் தெய்வங்களின் பெயர்களை மருவியவையாகவே இருக்கும். அவற்றில் மரபு மிளிரும், பழைமை தொனிக்கும்,

புனிதம் ஒலிக்கும். ஆடம்பர, டாம்பீக வாழ்க்கை முறையில் நாட்டங் கொள்ளாத இக் கிராம மக்கள் சான்றோர் காட்டிய வழியில் நன்கு ஒழுகி எளிய முறையில் வாழ்கை நடத்தி வருகின்றார்கள். கற்பக தரு எனப் பனை மரத்தை உபாசித்து வரும் அவர்கள் அதன் உச்ச பயனை அனுபவித்து தமிழர் பண்பாட்டுச் சின்னமாக விளங்குகிறார்கள்.

புலோலியைக் குறிப்பிடும்போது ‘யாழ்ப்பாண வரலாற்றில் சைவத் தமிழறிஞர்க்குப் பெயர் பெற்ற பகுதி புலோலி என்பது பிரசித்தம். இப் புலோலியார் கவித்துவப் புலமை மிகுந்தவர்கள். அங்கத்தைய பெண்களும் கவி மூலம் வார்த்தையாடுவதாகக் கூறுவதுமுண்டு. புலோலித் தமிழ் மணமும் சித்தாந்த சைவ மணமும் கமழும்...’ எனக் கலாநிதி மு. கந்தையா அவர்களும், ‘புலமையும் பண்பும் மிக்க புலோலியின் கண்...’ என்று இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அவர்களும், ‘புற்றளை (இச்சிற்றூரை உள்ளிட்ட கிராமம் புலோலி) பல பெரியார்கள், அறிஞர்கள் வாழ்ந்து வரும் இடமாகும்’ என்று பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் அவர்களும் ‘தமிழ்ப் பேறறிஞர் பலரை ஈன்றெடுத்த மண் புலோலி’ என்று இலக்கியக் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் புகழாரம் சூட்டிக் கௌரவித்தமை அவ்வூர் பெருமக்களின் சான்றாண்மைக்கு இலக்கணம் வகுப்பதாக அமையும்.

இத்துணை உன்னத கீர்த்தி சேர்ந்த தகைமைக்கு வழி சமைத்த பேரறிஞர்களுள் சதாவதானி கதிரைவேற்பிள்ளை, அறிஞர் கந்த முருகேசனார் ஆகியோர்கட்கு நன்றிக் கடனாக அப் பெருந்தகைகளின் திருவுருவச் சிலையை அவ்வூர் மக்கள் நிறுவி உபசரித்து வருகின்றனர்.

புலோலி வாழ் சிறார்களின் கற்கை வளத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் அங்கு ஆறு ஆரம்பப் பாடசாலைகளும்,

மூன்று உயர்தரக் கல்விக் கூடங்களும் இயங்கி வருகின்றன. போதனாசிரியர் பற்றாக்குறை வந்துற்ற போதிலும் மாணவரின் முயற்சியால் கணிசமான எண்ணிக்கையிலானோர் பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளமை வியக்கத் தக்கதோர் சாதனையாகும். ஓய்வு நேரங்களில் குடிமக்கள் தங்கள் கல்வி வளத்தை அபிவிருத்தி செய்துய்ய ஆங்காங்கு நூலகங்கள் செயற்பட்டு வருகின்றன.

சைவ சமய பண்பாட்டு மரபில் வழிவந்த அவ்வூர் மக்கள் தெய்வ பக்தி மிக்க ஆசார சீலராகத் திகழ்கின்றனர். புலோலி பர்வதவர்தனி சமேத பசுபதீஸ்வர தேவஸ்தானம், சுயம்புலிங்கமாக அக்கிராம மக்களுக்கு அருள் பாலிக்கும் புற்றளை சித்திவிநாயகர், தான்தோன்றி உபய கதிர்காம சுப்பிரமணியராலயம், மாயக்கை, ஆத்தியடி விநாயகர் திருக்கோவில்கள் குறிப்பிடத்தக்க முக்கிய வழிபாட்டுத் தலங்களாகும். மந்திகை கண்ணகை அம்மன், சந்தாதோட்டம் முதலியம்மன், மாதனை காளி கோயில், நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆகியன சக்தி வழிபாட்டுத் தலங்களாகும். இவ்வாலயங்களில் நித்திய, நைமித்திய பூசைகள் வேதாகம முறைப்படி தவறாது நடைபெற்று வருகின்றன.

புலோலி உப அஞ்சலகம், கால்நடை வைத்திய நிலையம், சமநலச் சேவைத் திணைக்களம், பிரதேச செயலகம், மக்கள் சந்தை, ப.நோ.கூ.ச., பனை தென்னை அபிவிருத்திச் சங்கம், பிரதேச சபைச் செயலகம், பேரூந்து நிலையம், வலயக் கல்விச் செயலகம், ஆதார வைத்தியசாலை ஆகிய அரச பிரசித்த செயலகங்கள் தத்தம் துறைகளில் செவ்வனே இயங்கி வருகின்றன. (போர்க்கால அழுத்தங்கள், அனர்த்தங்கள் புறநீங்கலாக).

இனி அவ்வூர் மக்களின் தொழில் விவரங்களைப் பார்ப்போம். பெரும்பாலான மக்கள் தமது முன்னோர் காட்டிய சீரிய

வழியில் ஜீவனத் தொழிலாக வேளாண்துறையில் ஊக்கமுடன் செயற்பட்டு வருகின்றனர். சுண்ணாம்புக் கற்பாறைத் தொடர்களை அடித்தளமாகக் கொண்ட வளம் மிக்க செம்மண் முகப்பையுடைய மேட்டு நிலங்கள் சாகுபடி செய்ய உகந்தவையாக உள்ளன. நன்நீர் செறிந்த ஆழமான கிணறுகள், நீர் நிலைகளினின்று நீர் இறைக்கப்பட்டு சாமை, குரக்கன், தினை போன்ற தானியங்கள், கத்தரி, பாகல், வெண்டை, பயற்றை, பூசணி போன்ற மரக்கறி வகைகள் வத்தகை, வெள்ளரி போன்ற பழவகைகள், மரவள்ளி போன்ற கிழங்கு வகைகள் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. காசுப் பயிரெனக் கருதப்படும் புகையிலை, வெங்காயம் போன்றவற்றிற்கு அதிகம் கவனம் செலுத்தப்படுகிறது. அவை நல்ல மகசூல் ஈந்தால் கணிசமான இலாபமீட்டும் விவசாயிகளின் பொருளாதாரத்தை நிவர்த்தி செய்ய இது நன்கு உதவும்.

மழை வெள்ளம் தேங்கி நிலை கொள்ளக் கூடிய தாழ்வு நிலங்களில் நெற்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. நீர்ப்பாசன வசதியற்ற பிரதேசமாகையால் மானாவாரிப் பயிர் நடுகை செய்யப்பட்டு வானத்தை நம்பியிருக்க வேண்டிய பரிதாப நிலை வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஏற்படுகிறது. வானம் பொய்த்தால் அவர்களுக்கு அதோ கதிதான். தெய்வ நம்பிக்கையை மூலபலமாகக் கொண்டு அறநெறி பிறழாத ஒழுக்க நெறியில் வாழ்வியற்றும் புலோலிவாழ் பெருங்குடி மக்கள் வியக்கக் கூடிய அளவில் அறுவடை செய்கின்றனர் என்றால் தெய்வத் திருவருளாலன்றி வேறெந்த வகையில்? என்று எண்ணத் தோன்றுகிறது.

மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், சட்டத்தரணிகள், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், பட்டதாரிகள், ஆசிரியர்கள் எனப் புலோலி மக்கள் சர்வதேசமெங்கும் இன்று பரந்துபட்டு வாழ்வதும் இங்கு குறிப்பிடற்பாலது.

எஞ்சிய வீத மக்கள் வர்த்தகம், அரச, வங்கி, தனியார் சேவையிலும் கட்டுமானம் போன்ற பணிகளிலும் ஏனைய உபரித் தொழில்களிலும் ஈடுபட்டு, தங்கள் பாரம்பரியம், பண்பாடு, மரபு, கலாசாரம் போன்றவற்றிற்கு ஊறுவிளையாவண்ணம் தூய வாழ்வு நடத்தி வருகின்றார்கள்.

போர்க்காலச் சூழ்நிலையில் உற்றார், உறவினர், நண்பர் உடைமைகளை இழந்து போர் வடுக்கள் மத்தியில் ஏக்கத்துடன் சுதந்திர நல் வாழ்வை எதிர்நோக்கி மனிதராக வாழத்துடிக்கும் மறவர் குலத்துதித்த புலோலி வாழ் மக்களை வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**– வே. ஆறுமுகம்**

'புற்பதி',
புற்றளை,
புலோலி.

(08.04.2000 இல் ஐ.டீ.ஊ. இல் ஒலிபரப்பான கட்டுரை மறு ஒலிபரப்பு 17.12.2000)

(புலோலியூர் சொல்லும் கதைகள் நூலிலும் இடம்பெற்றது– 2002)